www.padippakam.com

# இணைவு முயற்சியில் பிற்போக்குவாதிகளின் ஊடுருவல்கள்

PLOT

*தமிழீழ விடுதலைப் போராட்டத்தை உளசுத்தமாக முன்னெடுக்கும் தாபனங்கள் அனைத்தும் தமக்குள் முரண்படாமல், ஒரு பொது உடன்பாட்டிற்கு முன்வரவேண்டும் என்று நாம் நீண்ட காலமாகவே செயல்பட்டு வந்திருக்கிறோம். இதில் நாம் அடைந்த ஏமாற்றங்களும் தோல்விகளும், துரோகங்களும் கணக்கில் அடங்கா. ஆயினும் இவற்றை வெளிப்படுத்துவது தாபனங்களின் இணைவிற்குக் குந்தகமாக இருக்கும் என்பதனால் இதுநாள் வரை மௌனமாகவே இருந்தோம்.*

*எமது இந்த மௌனத்தையே பலவீனமாகக் கருதிச் சில தாபனங்கள் 'ஐக்கியத்திற்கு நாமே குந்தகம் செய்தவர்கள் என்ற பொய் பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட்டார்கள். தாபனங்களின் இணைப்புக்கென உருவாக்கப்பட்ட ஈழ விடுதலைக் குழு 1-1-84-ல் வெளியிட்ட அறிக்கையிலும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைப்பற்றி பல தவறான விபரங்கள் தந்துள்ளார்கள். அத்துடன் இதன் பின்பும் நாம் இப்படியே மௌனமாக இருப்பது, சந்தர்ப்பவாதிகளுக்கு மேலும் வாய்ப்பாகிவிடும் என்பதனால் எம் மௌனத்தைக் கலைக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.*

*உள்வீட்டில் தீர்க்கவேண்டிய பிரச்சினைகளை, வீதியில் வந்துதான் தீர்க்கவேண்டும் என்று சிலர் ஆசைப்படும்பொழுது நாம் என்ன செய்வது?*

*வீதிக்கு வந்தேயாக வேண்டியிருக்கிறது.*

## முதல் இணைவு முயற்சி

1982 ஏப்ரல் மாதத்தில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மத்திய குழு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை முன்னெடுக்கும் சகல முற்போக்குத் தாபனங்களோடும் ஒரு பொது உடன்பாட்டில் இணைய வேண்டும் என்று தீர்மானித்தது. இத்தீர்மானத்தினை நாம்மேற்கொண்டமைக்கு முக்கிய காரணம், தமிழீழ விடுதலைப் கூட்டணி, இக்காலத்தில் போராட்டத்தில் இருந்து முற்றாக பின்வாங்கியதோடு, சிங்கள அரசோடு இணைந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக்கொடுக்கும் நடவடிக்கைகளையும் மேற்கெண்டிருந்தது. இதனால் தமிழ்மக்களிடம் ஐக்கியப்பட்ட ஒரு தாபனம் இல்லாத நிலையில், தமிழீழப் போராட்டம் சாத்தியமாகாது என்ற அவநம்பிக்கையை அவசரமாக நீக்கவேண்டி யிருந்தது. மேலும் தமிழர் விடுதலை கூட்டணியின் இத் துரோகத்தால், ஆத்திரமுற்ற தாபனங்கள் பல தமிழர் விடுதலைக் கூட்டணியை அம்பலப்படுத்தும் போட்டியே, தமிழீழப் போராட்டத்திற்குப் பாதகமாக மாறிவிடக் கூடாது என்பதனாலும், நாம் இதய சுத்தியுடன், தாபனங்களுடன் ஒரு பொது உடன்பாட்டில் இணைவதற்கு முடிவெடுத்தோம்.

இதன் அடிப்படையில் நாம் ஈழ மாணவர் பொது மன்றத்துடனும் (GUESS), பின்பு ஈழ விடுதலை இயக்கத்துடனும் (EROS) தனித்தனியாகப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தோம். இப் பேச்சுவார்த்தைகளின் பொழுது முன்பு ஈழ விடுதலை இயக்கத்தில் (EROS) இருந்துவிலகிய, அல்லது விலக்கப்பட்ட 'லங்கா ராணி' நூல் ஆசிரியர் அருளரும் எமக்கு உதவியாக இருந்தார். இக் காலத்தில் அருளர் எவ்வித தாபனத்தோடும் தொடர்பு இல்லாதவராக இருந்தாலும், ஈழ விடுதலை இயக்கம் (EROS), ஈழ மாணவர் பொது மன்றம் (GUESS) என்பவற்றின் அமைப்புகளை நன்கு தெரிந்தவர் என்பதனால், இவைகளைப் பற்றி எமக்குக் கூடிய விளக்கத்தைத் தருவார் என்பதற்காக இப் பேச்சுவார்த்தைகளில் அருளர் அவர்களும் உடனிருக்க அழைக்கப்பட்டார்.

இப் பேச்சுவார்த்தைகள் ஈழ விடுதலை இயக்கத்தைச் (EROS) சேர்ந்த பாலா என்பவருடனும், ஈழ மாணவர் பொது மன்றத்தைச் (GUESS) சேர்ந்த C. T. தியாகராசர், சஞ்சன் ஆகியோருடனும் தனித்தனியாக நடைபெற்றது. இப் பேச்சுவார்த்தைகளின் பயனாக ஈழத்தில் இணைவு முயற்சிக்கான அடித்தளத்தை உருவாக்குவதற்கு நாம் C. T. தியாகராசாவை ஈழத்திற்கு அனுப்பி வைத்தோம். ஈழ விடுதலை இயக்கம் (EROS), ஒரு தாபன வடிவமோ, அல்லது முறையான வேலைத் திட்டமோ இல்லாதவர்கள் என்பதனாலும், ஈழ மாணவர் பொதுமன்றமே (GUESS) மாணவர்கள் மத்தியில் ஒழுங்காக தாபன மயப்பட்டிருப்பதனாலும் அருளர் நாம் ஈழ மாணவர் பொதுமன்றத்துடனேயே (GUESS) இணைப்பை ஏற்படுத்துவதில் முன்நிற்க வேண்டும் என்று ஆலோசனை கூறினார்.

## தனிநபர் பயங்கரவாதமும் இணைவு முயற்சியில் பின்னடைவும்

தாபனங்களுக்கிடையில் உள்ள சிறுசிறு பேதங்களை மறந்து, ஓர் ஐக்கியப்பட்ட செயல்பாட்டின் மூலம், தமிழ் ஈழப் போராட்டத்தை முன்னெடுப்பதற்காக நாம் நம்பிக்கையோடு தாபனங்களோடு பேச்சுவார்த்தைகளை நடத்தும் வேளையில், எமது தாபனத்தை இல்லாதொழிப்பதை நோக்கமாகக் கொண்ட விடுதலைத் தாபனமொன்றின் செயல்பாடு எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. 1982 மே மாதத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சார்ந்த பிரபாகரன், ராகவன் ஆகியோர் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகச் செயலாளர் உமாமகேஸ்வரன், கண்ணன் ஆகியோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தை இல்லாதொழிப்பதன் மூலம், தமிழீழ விடுதலையை வென்றெடுக்கலாம் என்ற இவர்களின் கேவலமான அரசியல் தாபனங்களின் இணைவு முயற்சியைப் பெரிதும் பாதித்தது. தற்காலிகமாக நாம் இணைவு முயற்சிக்கான பேச்சுவார்த்தைகளைக் கைவிட நேரிட்டது. ஆயினும் இதன் பின்பு ஏற்பட்ட அரசியல் நிலைமைகள், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் தாபனங்களை ஐக்கியப்படுத்த வேண்டிய சூழ்நிலையைத் தோற்றுவித்தது. தமிழர் விடுதலைக்கூட்டணி, சிங்கள அரசுடன் கொண்ட நட்புறவு தமிழீழ விடுதலைக்கு எதிராக மாறியதோடு, விடுதலை தாபனங்களுக்கு எதிராகப் பகிரங்கமாகச் செயல்படும் போக்கினையும் மேற்கொண்டிருந்தது. பல்வேறு தமிழினப் படுகொலைகளுக்குக் காரணமாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனாவை, "ஆசியாவின் தலைசிறந்த ஜனநாயகவாதி என்று புகழ்ந்தும். கோட்டையில் நடைபெற்ற புதிய பாராளுமன்றத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு "ஜனாதிபதியின் நேர்மையில் நம்பிக்கை வைக்கிறேன்; தமிழமக்களுக்கு அவர் நியாயம் வழங்குவார்" என்றெல்லாம் பேசியதுபோன்ற செயல்கள் மூலம் திரு. அமிர்தலிங்கம் தமிழ்மக்கள் போராட்டத்தைத் திசை திருப்பும் மோசமான நடவடிக்கைளை மேற்கொண்டிருந்தார்.

இந்த இக்கட்டான நிலையில் சிறீலங்காப் பாராளுமன்றப் பாதையை நிராகரித்த தாபனங்கள் அனைத்தையும், ஐக்கியப்படுத்தி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய அவசியத் தேவையை நாம் உணர்ந்தோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE), ஈழ விடுதலை இயக்கம் (EROSS) ஈழ மாணவர் பொதுமன்றம் (GUESS), தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), தமிழ்மக்கள் ஜனநாயக முன்னணி என்பவற்றுடன் தேவன் தலைமையில் அமைப்பாக உருவாகிவரும் (பின்பு தமிழீழ விடுதலை இராவணுமாக (TELA) வடிவெடுத்தது) பெயரிடப்படாத தாபனம் யாவற்றையும் ஒரு பொது உடன்பாட்டில் ஐக்கியப்படுவதற்குப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தோம்.

படிப்பகம்

www.padippakam.com

## தமிழீழக் விடுதலைப் புலிகளின் சந்தர்ப்பவாதம்

தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) இப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதனால், 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்ற பெயரைத் தமது தாபனம் மாத்திரமே பயன்படுத்த வேண்டும் என்றும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்ற பெயரை பாவிக்க கூடாதென்ற கோரிக்கையைப் பிரபாகரன் முன்வைத்தார். தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற பெயரைத் 'தமிழீழ மக்கள் விடுதலை கழகமும் பாவிப்பதற்கு உரிமையுடையதாகவே இருந்தது. ஏனெனில் தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்து பிளவுற்று வெளியேறியபொழுது 'மத்திய குழுவின் முக்கிய உறுப்பினர்களும் பிரிந்து வந்தமையினால் தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்து பிரபாகரன் வெளியேற்றப்பட்டார் என்ற அடிப்படையில், தமிழீழ மக்கள் விடுதலை கழகமும் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயரைப் படைத்துறைப் பிரிவிற்கு பயன்படுத்தி வந்தது. (இன்றும் இந்தியாவில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகச் செயலதிபரை ''விடுதலைப் புலி முகுந்தன்'' என்று அழைக்கும் வழமை உண்டு.) தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயரை நாம் பயன்படுத்தும் உரிமையுடைவர்களாக இருந்தும், பிரபாகரனும் அவர் சார்ந்த தமிழீழ விடுதலைப் புலிகளும் ஓர் உடன்பாட்டிற்கு முன்வரும் நல்ல சூழ்நிலையை உருவாக்கக் வேண்டும் என்பதனால் நாம் ''இன்மேல் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயரைப் பயன்படுத்துவதில்லை'' என்று அறிவித்தோம். இவ் அறிவிப்பைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைக்கு வரச் சம்மதித்தார்கள்.

ஆயினும் தாபனங்களின் இணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் பங்கு பற்றாமல் ஒதுங்கிக்கொண்டார்கள். தாம் இவ்வாறான இணைப்பு முயற்சிக்கு ஆதரவு தருகின்றோம் என்றும், ஏனைய இயக்கங்கள் இணைந்து, ஒரு பொது வேலைத் திட்டத்தை ஆரம்பித்த பின்பு, தாம் இணைய விரும்புவதாகவும், அதுவரை இவ்விணைப்பு முயற்சியில் தம் தாபனம் பங்குபற்ற விரும்பவில்லை என்றும் கடிதமூலம் அறிவித்தார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்நிலைப்பாட்டைப் பொதுவாக இணைப்பு முயற்சிக்கு ஆதரவு கொடுத்த எல்லா தாபனங்களும் கண்டித்தன. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், தமிழர் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஓர் இரகசிய உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக கூறப்பட்டதில் உண்மை இருக்கலாம் என்று நம்ப இச் சம்பவம் ஏதுவாயிற்று. தமிழீழ விடுதலைப் புலிகள், தாபனங்களின் இணைப்பு முயற்சிக்கு ஆரம்பத்தில் ஆர்வம் காட்டியதன் மூலம் அற்பத்தனமான சில தனிப்பட்ட லாபங்களைச் சபாநித்ததுடன் திருப்திப்பட்டுக் கொண்டார்கள். ஏனெனில், தமிழீழ விடுதலைப் புலிகளில் பிளவு ஏற்பட்ட பின்பு பிரபாகரன், குட்டிமணியோடு தொடர்புகொண்டு தமிழீழ விடுதலை இயக்கத்தில் (TELO) இணைந்து இயங்கினார். பின்பு தமிழீழ விடுதலை இயக்கத்தில் (TELO) இருந்து பிரிந்து வந்து மீண்டும் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' அமைப்பை புதுப்பித்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயர் அப்பொழுது தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் படைத்துறைப் பிரிவினால் பாதிக்கப்பட்டு வந்தது. இது தமக்கும் தம் இயக்கத்தினரும் ஆளுமைக்கு ஒரு சவாலாக அமைந்ததனால், ''தமிழீழ விடுதலைப் புலிகள்'' என்ற பெயரைத் தாம் மாத்திரம் பாவிக்கவேண்டும் என்பதற்காக மட்டும் பேச்சுவார்த்தையில் ஆர்வம் காட்டினாரே யல்லாமல், தாபனங்களின் இணைவிற்கு இவர்கள் அக்கறை காணபிக்கவில்லை.

ஆயினும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), ஈழ விடுதலை இயக்கம் (EROS), ஈழ மாணவர் பொதுமன்றம் (GUESS), தமிழ் மக்கள் சனநாயக முன்னணி என்பவற்றுடன் (பெயரிடப்படாத தாபனமாக அப்பொழுது இருந்த தமிழீழ விடுதலை இராணுவத்தைச் சேர்ந்த) தேவனும் இணைவு முயற்சியில் கலந்துகொண்டார். இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் யாவற்றிற்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த தோழர் உமாமகேஸ்வரன் இணைப்பாளராகக் கடமையாற்றினார். ஆனால், இயக்கங்களின் இணைவு முயற்சியின் வளர்ச்சியில் சிறு வீண்சந்தேகங்களையும், தப்பபிப்பிராயங்களையும் ஏற்படுத்தும் என்பதனால், லங்காராணி நூல் ஆசிரியர் 'அருளரை' இணைப்பாளராக நியமிப்பதெனப் பிரேரித்தோம். அருளர் எந்த தாபனத்தோடும் தொடர்பில்லாத பொதுவானவர் என்ற அடிப்படையில், இந் நியமனத்திற்குத் தமிழீழ மக்கள் விடுதலை முன்நின்றது. ஆனால் ஈழ மாணவர் பொதுமன்றம் (GUESS), தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), தமிழர் விடுதலை இராணுவம் (TELA) அருளரை இணைப்பாளராக நியமிப்பதை எதிர்த்தன: தாபனங்களில் அங்கத்துவம் வகிக்காத அவர் இணைப்பாளராகக் கடமை புரிவதை அவர்கள் விரும்பவில்லை. ஆனாலும் நமது வேண்டுகோளுக்கு இணங்கி அருள்ரை இணைப்பாளராக நியமிப்பதெனத் தீர்மானம் செய்யப்பட்டது. இணைப்பு முயற்சியில் ஈடுபடும் அமைப்புக்கு 'ஈழ விடுதலைக் குழு' எனவும் பெயரிடப்பட்டது.

## ஈழ விடுதலைக் குழு இணைப்பாளரின் யதேச்சை போக்கு!

அருளர், ஈழ விடுதலைக் குழுவின் இணைப்பாளராக நியமிக்கப்பட்டதும், இணைவு முயற்சிக்கு உடன்பட்ட தாபனங்களின் சம்மதமின்றி, தாபனங்களுடன் தாம் தனிப்பட நடத்திய பேச்சுகளின் அடிப்படையில், ஒவ்வொரு பொறுப்பை வழங்குவதெனத் தன்னிச்சையாக முடிவெடுத்து அதை அறிவித்தார். ஈழ விடுதலைக் குழு இணைப்பாளரின் இத் தன்னிச்சையான தீர்மானத்தின்படி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் அரசியல் வேலைகளையும், தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ விடயங்களையும், ஈழ விடுதலை இயக்கம் (EROS) நிதி விடயங்களையும், ஏனைய தாபனங்களுக்கும் இவ்வாறே பொறுப்புகளை வழங்குவதென முன்வைக்கப்பட்டது. தாபனங்களை ஆலோசிக்காமல், தன்னிச்சையான போக்கில் ஈழ விடுதலைக் குழுவின் இணைப்பாளர் எடுத்த மேற்படி தீர்மானம், ஒருங்கிணைப்பில் ஆர்வம் காட்டிய தாபனங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியது. இது பல தப்பபிப்பிராயங்களுக்கும், வீண் சந்தேகங்களுக்கும காரணமாயிற்று. ஈழ விடுதலைக் குழு இணைப்பாளரின் பொறுப்பற்ற நடவடிக்கை தாபனங்களை இணைக்கும் முயற்சியில் இருந்த அனுபவக் குறையையும், யதேச்சை போக்கையுமே புலப்படுத்தி நின்றது: ஈழ விடுதலை குழுவின் இணைப்பாளர் அருளர், தாபனங்களின் ஒருங்கிணைப்பு நடவடிக்கையை இதய சுத்தியுடன் செய்தாரா அல்லது ஒரு பொழுதுபோக்கு நடவடிக்கையாக இவை மேற்கொள்ளப்பட்டனவா என்ற சந்தேகத்தை இது எழுப்பியது. ஈழ விடுதலைக் குழு இணைப்பாளரின் மேற்படி தீர்மானத்தை அனைத்துத் தாபனங்களும் நிராகரித்தன.

## தமிழர் விடுதலை கூட்டணியின் மாயவலை

இதன் பின்பு வட்டுக்கோட்டை பாராளுமன்றப் ஆசனத்திற்கு வேட்பாளரை நியமிக்கும் பிரச்சினை எழுந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி, மரணதண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில் இருந்த தமிழீழ விடுதலை இயக்கத்தைச் (TELO) சேர்ந்த குட்டிமணியின் பெயரை பிரஸ்தாபித்தது. தமிழர் விடுதலை கூட்டணி குட்டிமணியின் பெயரைப் பிரஸ்தாபித்ததன் நோக்கம், தமிழீழ விடுதலை இயக்கத்தின் கொள்கையில் கொண்ட பற்றுதலோ அல்லது குட்டிமணியிடம் கொண்ட அபிமானமோ காரணமில்லை. மக்கள் மத்தியில் தீவிரவாத இயக்கங்களுக்கு இருந்த செல்வாக்கைத் தம் வசப்படுத்துவதற்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக முற்போக்கு தாபனங்கள் ஐக்கியப்படுவதை தவிர்ப்பதற்குமே இச் சூழ்ச்சியை செய்தார்கள். (மரண தண்டனை விதிக்கப்பட்டவர் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்க முடியாதென்ற உண்மை, வழக்கறிஞர்கள் நிறைந்த தமிழர் விடுதலை கூட்டணிக்கு தெரியாத விடயம் அல்ல.) தமிழர் விடுதலை கூட்டணியின் இந்தச் சூழ்ச்சி அவர்களுக்கு பெரும் வெற்றியை கொடுத்ததென்றே கூற வேண்டும். ஏனெனில் குட்டிமணியின் பெயரை வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்குப் பிரேரித்ததும், தாபனங்களின் இணைவில் உடன்பாடு கொண்டிருந்த தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) பின்வாங்கத் தொடங்கியது. தமிழர் விடுதலைக் கூட்டணியுடனான அதன் உறவில் நெருக்கம் ஏற்பட்டது.

தமது தலைவர்கள் ஈழத்தில் சிறையில் இருப்பதனால் அவர்களுடன் கலந்து பேசியே முடிவு எடுக்க வேண்டுமெனவும், அதுவரை பேச்சுவார்த்தையில் எதுவும் கூற முடியாது எனத் தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) கூறியது. தமிழீழ விடுதலை இயக்கத்தின் (TELO) இந் நிலைப்பாடு வேதனையும் வேடிக்கையும் நிறைந்ததாகும். சிறீலங்காவின் பாராளுமன்ற பதவிகளை நிராகரித்து உண்மையான புரட்சிகர விடுதலையை வென்றெடுப்போம். இந் நோக்கத்தில் உழைக்கும் ஏனைய தாபனங்களோடு இணைந்து செயல்படுவோம் என்றவர்கள் குட்டிமணிக்குப் பாராளுமன்றப் பதவி கிடைக்கப்போகின்றதென்றதும் தம் கொள்கைகள், கோட்பாடுகள், இலட்சியம் யாவற்றையும்

படிப்பகம்

www.padippakam.com

ஒரு நொடியில் கைவிட்டு நின்றார்கள். தமிழீழ விடுதலை இயக்கத்தின் (TELO) இந்தப் பலவீனத்தைப் புரிந்து கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி மிகவும் சாதுரியமாகச் செயல்பட்டது. ஒரு புரட்சிகர விடுதலைத் தாபனத்தை சேர்ந்தவரை அத் தாபனத்தைக் கேளாமலேயே பாராளுமன்ற அங்கத்தவராக நியமிக்கும் உரிமையைப் பிறிதொரு தாபனம் பெற்றிருப்பது விடுதலைப் போராட்ட வரலாற்றில் வேடிக்கையானதொரு நிகழ்ச்சியாகும்.

தமிழர் விடுதலை கூட்டணியின் இச் சூழ்ச்சிக்குப் பலியாகிய தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) ஒருங்கிணைப்பு முயற்சியில் இருந்து பின்வாங்கியதைத் தொடர்ந்து ஈழ விடுதலைக் குழுவின் தாபனங்களை இணைக்கும் முயற்சி ஸ்தம்பிதமடைந்தது.

## தாபனங்களின் இணைப்பில் தனி நபர்களின் கயமை

இச் சந்தர்ப்பததில் ஈழ விடுதலைக் குழுவின் நடவடிக்கைகள் குறித்தும் சில விடயங்களைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகின்றோம். ஏனெனில் 1-1-1984ல் ஈழ விடுதலை குழுவின் அறிக்கையில் அருளர் குறிப்பிட்ட சில விடயங்களின் தப்பபிப்பிராயத்தை போக்கும் என்பதனால் இது அவசியமாக இருக்கின்றது.

அருளர் இவ்விணைப்பு முயற்சியில் ஈடுபட்ட காலங்களில் அவருடைய தனிப்பட்ட செலவுகளை 'தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமே' பொறுப்பேற்று வந்தது. ஆயினும் தாம் இணைப்பாளராகச் செயல்படுவதற்குத் தமக்கு மாதம் 1000 ரூபா இணைவு முயற்சிக்கு முன்வரும் தாபனங்கள் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை அருளர் விடுத்தார். ஆனால் ஈழ விடுதலைக் குழுவில் கலந்து கொண்ட தாபனங்கள் ஒவ்வொன்றும் மாதம் 100 ரூபா வீதம் ஆறு தாபனங்களும் 600 ரூபா வழங்குவதாக ஒப்புக்கொண்டன. மேலும் ஈழவிடுதலை குழுவின் கூட்டம் நடைபெறும் இடத்திற்கான வாடகையைத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் பொறுப்பேற்கும் எனவும் கூறப்பட்டது. இதன்படி நாம் அருளருக்கு மாதம் 100 ரூபாக் கொடுத்து வந்தோம். ஏனைய தாபனங்கள் இத் தீர்மானத்தின்படி அருளருக்குப் பணம் அளிக்கவில்லையாயினும், ஈழ விடுதலைக் குழுவின் செயல்பாடுகள் ஸ்தம்பிதம் அடையும்வரை, இக் கொடுப்பனவை நாம் ஒழுங்காக அளித்து வந்தோம். அதே சமயம் ஈழ விடுதலைக் குழு தனது 1-1-84 புத்தாண்டு புரட்டில், ''அருளரின் தனிப்பட்ட திட்டம் ஒன்றிற்கு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் உதவி செய்யும் என உறுதியளித்ததாகவும், பின் நாம் அதனைக் கைவிட்டமைக்குத், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தவிர்ந்த ஏனைய இயக்கங்களுக்கு நாம் பண உதவி செய்து வளர்த்துவிட்டால், அவர்கள் எம்மை மிஞ்சிவிடுவார்கள் என்ற அச்சமும், குறுகிய நோக்கமுமே நாம் அருளரின் தனிப்பட்ட திட்டத்திற்கு உதவ மறுத்தமைக்குக் காரணம் என குறிப்பிடுகின்றார்.

அருளர் தாம் ஒரு பண்ணை நடத்தி, அதன் மூலம் பெறும் வருவாயில், ஈழத்தில் இருந்து வரும் தம்போன்ற தனிப்பட்ட பிரமுகர்களுக்கு உதவிசெய்யப் போவதாகவும், அதற்கு நிதி உதவி வழங்கும்படியும் கேட்டிருந்தார். நாம் அருளரின் இத் திட்டத்திற்கு உதவுவதற்கு ஒருபொழுதும் சம்மதிக்கவில்லை. ஆனால் அருளரோ நாம் இதற்கு உடன்பட்டு, பின் மறுத்ததாகப் பொய்ப் பிரசாரம் செய்கின்றார். மேலும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தவிர்ந்த, ஏனையோர்க்கு உதவும் நோக்கம் இல்லாதவர்கள் என்றும் குறிப்பிட்டார். அருளர்போன்ற தனிப்பட்டவர்களின் பொருளாதாரத் திட்டங்கள் தனியுடைமையையே உருவாக்கும் என்பதனால், அருளரின் பொருளாதாரத் திட்டத்திற்கு பண உதவி செய்யமாட்டோம் என்றுதான் நாம் கூறினோமேயல்லாது, தாபனங்களுக்குப் பணஉதவி செய்யமாட்டோம் என்று ஒரு பொழுதும் கூறவில்லை. அருளர் கூறியதுபோல் நாம் ஏனைய தாபனங்களுக்கு உதவும் நோக்கம் இல்லாதவர்கள் அல்ல. கடந்த காலத்தில் ஈழ விடுதலை இயக்கத்திற்கு (EROS) 20;000 ரூபாவுக்கும் அதிகமாக நாம் கொடுத்திருக்கின்றோம். இது ஈழ விடுதலை இயக்கம் வளர்ந்து எம்மை அழித்துவிடும் என்ற அச்சத்தில் கொடுக்கப்பட்டதன்று, தமிழ் ஈழவிடுதலைக்குப் போராடும் எல்லாத் தாபனங்களின் முயற்சியையும் மதிக்கும் பரந்த நோக்கிலேயே நாம் இத்தகைய உதவிக்கு முன்நின்றோம்.

ஈழவிடுதலைக் குழுவின் இணைப்பாளர் தாபனங்களின் ஒருங்கிணைப்புக்கு நேர்மையுடனும், விவேகத்துடனும் செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டை ஈழவிடுதலை இயக்கம் (EROS), ஈழமாணவர் பொது மன்றம் (GUESS) என்பனவும் பின்னர் முன்வைத்தன.

ஈழ விடுதலைக் குழுவின் செயல்பாடுகள் ஸ்தம்பிதமடைந்த பின்பு, ஈழ விடுதலை இயக்கத்தைச் (EROS) சேர்ந்த ரட்டினசபாபதி லண்டனில் இருந்து வந்தார். தாபனங்கள் இணைவு முயற்சியில் அருளருக்கு இருந்த அனுபவக் குறைவையும் யதேச்சைப் போக்கையும் கண்டித்த ரட்டினசபாபதி ஈழ மாணவர் பொது மன்றத்தில் (GUESS) இருந்து உதயமாகிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (E.P.R.L.F) ஒரு மாணவர் அமைப்பேயென்றும். அது ஒரு மக்கள் அமைப்பு இல்லை என்றும் கருதினார். சாதாரணமாக வளர்ந்துவரும் மக்கள் தாபனமே மாணவர் அமைப்பை துணை தாபனமாக ஏற்படுத்தும், ஆனால் இங்கு மாணவர் அமைப்பான ஈழ மாணவர் பொதுமன்றம் (GUESS), மக்கள் அமைப்பாகத் தன்னைக் காண்பிப்பதற்காக உருவாக்கிய தாபனமே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (E.P.R.L.F) என்பதனால் அதனுடன் இணைவது பயன்தராது என்றும், தமிழீழ விடுதலைப் புலிகளும் (L.T.T.E), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் (PLOT) இணைய வேண்டும் என அறிவுறுத்தி அதற்கானபேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். அவருடைய முயற்சிக்கு நாம் முழு ஆதரவு தருவதாக வாக்களித்தோம். ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய ரட்டினசபாபதி தம்முயற்சிக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் (L.T.T.E), ஆதரவு தரவில்லை எனவும் தாம் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தை (PLOT) இவ் இணைப்பு முயற்சிகளில் உளசுத்தமாக ஈடுபடும் அமைப்பாக அங்கீகரிப்பதாக எம்முடன் ஓர் ஆரோக்கியமான புரிந்துணர்வை ஏற்படுத்தினர்.

இதன் பின்பு 1983 மே மாதத்தில் மீண்டும் ஒரு இணைவு முயற்சியை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆரம்பித்தது. இம் முயற்சிக்கு ஈழவிடுதலை இயக்கம் (EROS), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (E.P.R.L.F.) என்பன ஆதரவு தந்தன. இவ் இணைவுத் திட்டத்தில் தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), தமிழீழ விடுதலை இராணுவம் (TELA), தமிழ் மக்கள் சனநாயக முன்னணி என்பவற்றையும் அழைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி பின்னைய தாபனங்களும் இவ் இணைப்பு முயற்சிக்கு ஆதரவு காண்பித்தன.

## தனிநபர் பயங்கரவாதத்தின் அடுத்த கொடூரமும் புரட்சிகர தாபனத்தின் கோழைத்தனமும்:

தாபனங்களின் இணைவிற்குப் பேச்சுவார்த்தை நடைபெறும் வேளையில் தமிழீழ விடுதலை இராணுவத்தின் (TELA) தலைவர் ஒபரேய் தேவன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் (L.T.T.E) சுட்டுக் கொல்லப்பட்டார். தமிழீழ விடுதலைப் புலிகளின் மிருகத்தனமான இக் குரூர நடவடிக்கை இதற்கு முன்பும் பலதடவை அசிங்கமாக நடைபெற்றிருக்கிறது. தம்முடன் உடன்பாடில்லாத தமிழீழ விடுதலைப் போராளிகளைத் 'துரோகி' என்ற முத்திரையைத் தன்னிச்சையாக வழங்கிக் கொன்றொழிப்பதன் மூலம், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு மொத்த வாரிசாக நினைக்கும் அற்பத்தனம் பல அபூர்வமான தமிழீழ விடுதலைப் போராளிகளின் மரணத்திற்குக் காரணமாக இருந்திருக்கிறது. ஒபரேய் தேவன் பிறிதொரு தாபனத்தைச் சேர்ந்தவாராய் இருந்தாலும் கூட, அவர் ஒரு விடுதலைப்போராளி என்பதிலும், தமிழீழம் காணவேண்டும் என்ற அவரது உறுதியிலும், உழைப்பிலும் யாரும் சந்தேகம் கொள்ள முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கீழ்த்தரமான இவ் அரசியல் நடவடிக்கையைக் கண்டிக்கவேண்டும் என்று இணைப்பு முயற்சியில் ஈடுபட்ட தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT), தமிழீழ விடுதலை இராணுவம் (TELA), தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (E.P.R.L.F) என்பன முன்வந்தன. ஆனால் இதற்கு ஈழ விடுதலை இயக்கம் (E.R.O.S) இணங்க மறுத்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் (L.T.T.E.) இந் நடவடிக்கை தவறானது என உணர்ந்தாலும் அதைக் கண்டிக்கும் அளவிற்குச் சித்தாந்தத்தில் தெளிவும், தாபனத்தில் உறுதியும் இல்லாமல் ஈழ விடுதலை இயக்கம் (EROS) கோழைத்தனமாக ஒதுங்கி நின்றார்கள். ஒபரேய் தேவனை கொன்றது தமிழீழ விடுதலைப் புலிகள்தான் என்பது நிச்சயப்படுத்தாமல் இவ்வாறு அறிக்கை விடுவது தவறு என்று தமது தத்துவ வறுமையையும், கோழைத்தனத்தையும் மூடி மறைத்தனர். ஆயினும் தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) கொலை செய்தது தாமே என அறிவித்த

படிப்பகம்

www.padippakam.com

பின்பும்கூட, ஈழ விடுதலை இயக்கம் (EROS) தம் அரசியல் நேர்மையை வெளிப்படுத்தத் துணியவில்லை. இணைப்பு முயற்சியின் பிறிதொரு தடைக் கல்லாக மேற்படி சம்பவம் நிகழ்ந்தது.

## ஒருங்கிணைவின் புதிய போக்குகள்

1983 ஆவணி மாத வன்செயலைத் தொடர்ந்து தமிழீழக் கோரிக்கையைச் சிங்கள அரசு தடைசெய்தது. இது தமிழர் விடுதலைக் கூட்டணிக்குப் பெரியதொரு தலையிடியைக் கொடுத்தது. தமிழீழப் போராட்டத்தில் ஒரு காலையும், மறு காலைச் சிங்கள பாராளுமன்றத்திலும் ஊன்றிக் கொண்டு நின்றவர்கள் இதன் பின்பு மோசமாக பாதிக்கப் பட்டார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் சமூகமான பாராளுமன்றப் பயணம் தடைப்பட்டு, அவர்களின் கையாலாகாத்தனம் மக்கள் மத்தியில் அம்பலமாகியது. மக்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பாராளுமன்றத்திற்கு அப்பால் முன்னெடுக்கும் தாபனங்களுக்கு ஆதரவு கொடுக்க ஆரம்பித்தார்கள். இப் புதிய நிலைமை தமிழர் விடுதலைக் கூட்டணிக்குப் பாராளுமன்றப் பாதையை நிராகரித்து ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்ட தாபனங்களின் துணையை நாட நிர்ப்பந்தித்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம், ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் கொண்ட நட்பும் உறவும் பகிரங்கமானபடியாலும், அவரது தனிப்பட்ட நேர்மையின்மையில் கொண்ட ஐயுறவும் அவருக்கு விடுதலை தாபனங்களோடு இணைந்து செயல்படும் வாய்ப்பை அளிக்கவில்லை. ஆனால் அமிர்தலிங்கத்திற்கு இணையான பிற்போக்குத்தனங்களையும், ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடனும், சிரேஸ்ட அமைச்சர்களுடனும் நெருங்கிய நட்புக் கொண்டவருமான சந்திரகாசனின் கபடத்தனம் வெளி உலகிற்கு இன்னும் பகிரங்கமாகாதபடியினால் சந்திரகாசன் பாராளுமன்றத்திற்கு அப்பாற்பட்ட விடுதலைத் தாபனங்களுக்குத் தலைமை தாங்க முன்வந்தார்.

## பழைய பாலும் புதிய பாத்திரமும்

சந்திரகாசன் கடந்த காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியலோடு இணைந்தும், பிரிந்தும் ஒரு சந்தர்ப்பவாத அரசியல் நடத்தியவராவார். தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் அதன் போட்டித் தாபனமான தமிழர் விடுதலை அணியிலும் ஏக காலத்தில் அங்கம் வகித்த பெருமைக்குரியவராவார். தமிழீழப் போராளிகள் சிறைப் பட்டதும் அவர்களுக்காக இலவசமாக வாதாட வழக்கறிஞர்களை ஏற்பாடு செய்பவர் என்ற மாயையைத்தமிழீழத்தில் பரப்பும் அதே வேளையில் தமிழீழத்திற்கு தெரியாத வகையில் தமது இலவச சேவைக்கு வெளிநாடுகளில் பண உதவி பெறுவதும் இவருக்கு கைவந்த கலை.

சந்திரகாசன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகச் (PLOT) செயலதிபர் உமாமகேஸ்வரனுடன் உள்ள தொடர்பைப் பிரபல்யப்படுத்தி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தம்முடன் இணைந்துவிட்டதாகப் பொய்ப் பிரசாரம் செய்தார். மேலும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திற்கு நிதி உதவியினையும், இராணுவப் பயிற்சிகளையும் வழங்க இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் தாம் ஏற்பாடு செய்ததாக அபாண்டமான பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டார். ஏனைய தாபனங்களுக்கும் தாம் உதவ முன்வருவதாகக் கூறிய இவரது வார்த்தைகளை நம்பி தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), ஈழ விடுதலை இயக்கம் (EROS) ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (E.P.R.L.F.) என்பன பிற்போக்குச் சக்திகளுக்கு எதிராக முற்போக்குச் சக்திகள் ஐக்கியப்பட வேண்டும் என்ற கோட்பாட்டை நிராகரித்து, சந்திரகாசரின் தலைமையை அவமானகரமாக ஏற்றுக்கொண்டு நிற்கின்றன.

தாபனங்களில் கடுமையாக உழைத்து, உண்மையும் நேர்மையும் கொண்ட தலைமையை உருவாக்கத்திராணியற்ற சந்திரகாசனுக்கு, பரம்பரை தலைமைகளில் பற்றும் பிடிப்பும் கொண்ட ஈழ விடுதலைப் புரட்சியாளர்களும், தமிழீழ விடுதலை இயக்கமும் அடிபணிந்தன. இது ஒரு சந்தர்ப்பவாதக் கூட்டேயாகும்.

## எமது வேண்டுகோள் :-

1-1-84 இல் ஈழ விடுதலைக் குழு தனது புத்தாண்டுப் புரட்டில், ஈழவிடுதலைக் குழுவின் சாதனைகளை அறிவித்திருந்தது. அதில் குறிப்பிடபபட்ட விடயங்கள் (ஒவ்வொரு வசனமும் அடுத்த வசனத்தோடு முரண்பட்டிருக்கும் பொழுது) யாவற்றிற்கும் பதில் கூறுவது எமது நோக்கம் அல்ல. தமிழீழ விடுதலைக் குழுக்களை ஒருங்கிணைப்பதில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) மேற்கொண்ட முயற்சிகளைத், தமிழ் மக்களுக்கு சமர்ப்பிப்பதற்காகவே இப் பிரசாரத்தை வெளியிடுகின்றோம். கடந்த காலத்தில் எமது முயற்சியில் எமக்கு ஏற்பட்ட சோதனைகளையும், மன உளைச்சலையும் தமிழ்மக்கள் முன்வைப்பதன் மூலம், இம் முயற்சியில் நாம் புதிய பலத்தைப் பெறுவோம் என நம்புகின்றோம். இம்முயற்சியினைக் கைவிடாது, தொடர்ந்தும் மேற்கொள்வோம் என்றும் உறுதி கூறுகின்றோம்.

அதே வேளையில் தமிழீழப் போராட்டத்தை முன்னெடுக்கும் சகல தாபனங்களும் ஒன்றிணைய வேண்டும் என்று ஆவல் கொண்ட தமிழ்மக்கள், கடந்த காலத்தில் எமது முயற்சிகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் பக்கபலமாக நின்று ஆதரவு தந்தமைக்கு நன்றி கூறும் அதே வேளையிலே, அவர்களிடம் பின்வரும் வேண்டுகோளையும் விடுக்கின்றோம்.

''ஒரு விடுதலைத் தாபனம் மாத்திரம் தமிழீழப்போராட்டத்தை முன்னெடுத்தால் விடுதலை கிடைத்துவிடும் என்று நம்பாதீர்கள். இது உண்மையானால் தமிழ்மக்கள மத்தியில் உள்ள பேதங்களைக் கடந்து, தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஐக்கியப்பட்ட போராட்டத்திலேயே விடுதலைக்கான முன்னெடுப்புகள் ஆரம்பித்திருக்க வேண்டும். இங்கு ஒரே தாபனம் வேண்டும் என்பதற்குப் பதிலாக, விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் தாபனங்களுக்குப் தமிழீழ விடுதலையில் உள்ள பற்றுதல், அதற்கான கடின உழைப்பு, தியாகம் அர்ப்பணிப்புக்கு அஞ்சாத திட உள்ளம், நீண்ட கால தீர்க்கதரிசனம் என்பன வேண்டும் என்பதே இப்பொழுது அவசியமாகிறது. தமிழீழ விடுதலையை முன்னெடுக்கும் தாபனங்களில் இத்தகைய விடுதலை இலட்சணங்களை இனம்கண்டு வளர்க்கவும், அவை இல்லாதபட்சத்தில் வெறும் டமாரம் என்று அவற்றை நிராகரிக்கவும் தமிழ்கள் தயங்கக்கூடாது. இதுவே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு ஆற்றலும், வீரியமும் கொண்ட ஒரே தாபனத்தை உருவாக்குவதற்குத் தமிழ்மக்கள் ஆற்றும் பங்களிப்பாக அமையும்."

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

செய்தி - தொடர்பு திணைக்களம்

PRIENTED by
B. Ravi

படிப்பகம்